24th July 1962]

கனம் திரு. பூ. கக்கன் : திருநெல்வேலி ஜில்லாவிலே மூன்று இடங்களில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். காளிங்கப்பட்டி கிராமத்தில் இது வெற்றிகரமாக நடக்கிறது. கல்லிக்குளம், மேலாத்தூர் கிராமங்களிலும் இது நடந்துகொண்டிருக்கிறது. காரணம் என்ன வென்றால், போதுமான விவசாயிகள் வரவில்லை. விவசாயிகள் வராத காரணத்தினால்தான் தாமதம் ஏற்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், அரசாங்கத்தினுடைய தகவலிலேயிருந்து இந்தத் திட்டம் தாமதமாவதற்குக் காரணம் விவசாயிகள் முன்வரவில்லை என்று தெரிவதால் அவர்களுக்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்பட்டு இருக்கிறது, அவர்கள் என்னென்ன காரியங்கள் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதிலே நிபந்தனை என்னவென்றால், இதிலே குறைந்தது 50 ஏக்கர் இருக்கவேண்டும். ஏனென்றால், கூட்டுறவு முறையிலே இதைச் செய்யவேண்டும். தவிர, 30,000 ரூபாய்க்கு ஏற்பாடு செய்வதோடு, 50 ஏக்கரும் இருந்தால் இதைச் செய்ய முடியும். இதற்கு யாராவது முன் வந்தால், இதைப்பற்றி கவனிக்கப்படும்.

திரு. க. ர. நல்லசிவம்: இப்போது ஒரு சிலர் பம்பு செட்டுக்கு அனுமதி இல்லாமல் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே 50 ஏக்கர் பரப்பளவுக்கு சிலர் சேர்ந்து வந்து அனுமதி கேட்டால், சர்க்கார் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் காவேரி டெல்டாவைப் பற்றிச் சொல்வதாகத் தெரிகிறது. ரிவர் பம்பிங் ஸ்கீம் என்பது தண்ணீர் வீணாகப் போகும் காலத்திலே அதை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். காவேரியிலே போகிற தண்ணீர் வீணாக போகவில்லை.

Peruncheri and Pechiparai Dams (staff).

* 606. *Q.*—Sri V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the services of the staff working at Peruncheri and Pechiparai Dams in the Kanyakumari district have been regularised ?

The Hon. Sri V. RAMAIAH : No, Sir.

Documentary films.

607 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) the total number of documentary films so far produced by the Madras Information and Publicity Department and the years of production subjectwise ;

(*b*) the method adopted by the Government in choosing the "Subjects" for documentaries ; and

(*c*) whether the production of documentary is given to private persons ?

The Hon. Sri G. BHOOVARAHAN : (*a*) Seven documntary films were so far produced by the Information and Publicity Department—

(1) "Pudhiya Samudayam"—produced i[illegible] on the achievements of the State Government under the First [illegible]—Plan.

(2) "Kudumbanalam"—1960—on Family Planning.

[24th July 1962

(3) "Nalla Kalam Varuguthu"—1960—On Prize Bond.

(4) "Gramanalam"—1961—depicting the achievements of this Government under the two Five Year-Plans in the field of Community Development.

(5) "Kalviselvam"—1961—on the progress of education under the (two) Plan period.

(6) "Thamizhnadu Thazhaikkirathu"—1961—depicting the various irrigation projects, etc. during the Plan period.

(7) "Mangatha Oli"—1961—on the development of power in this State.

(*b*) There is no special method adopted in choosing the subject. The importance of the subject is the main consideration for selection.

(*c*) Yes, Sir.

திரு மீ. கலியாணசுந்தரம் : இந்தப் படங்கள் தயாரிப்பதற்காக ஆகிய செலவு எவ்வளவு என்பதை அறியலாமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : புதிய சமுதாயம் ரூ. 33,275·00, குடும்ப நலம் ரூ. 49,106·34 ந.பை நல்ல காலம் வருகுது ரூ. 9,866·73 ந.பை கிராம நலம், கல்விச் செல்வம், மங்காத ஒளி, தமிழ்நாடு தழைக்கிறது ஆகியவற்றுக்கு ரூ. 25,497·85, ந.பை. செலவாகியுள்ளது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் படங்களை எல்லாம் கனம் அமைச்சர்களாவது போட்டுப் பார்த்தார்களா ? அவைகள் நல்ல பலன் அளிக்கின்றதா ? என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஜி. பூவராகன் : சமீபத்திலே இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு கனம் அங்கத்தினர்களுக்கு எல்லாம் இந்தப் படங்கள் போட்டு காண்பிக்கப்பட்டது. அதற்கு எல்லா அங்கத்தினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அவைகளை கனம் அமைச்சர்களும் வந்து பார்த்தார்கள்.

திரு. டி. கார்சா கவுடர் : ஸார், உதகமண்டலம் நமது தேசத்திலேயே மிகவும் அழகாக இருக்கின்றது, நல்ல தோற்றங்கள் எல்லாம் உள்ளதாக இருக்கின்றது என்று சமீபத்திலே சென்னையிலே ஒரு சினிமா தியேட்டரிலே இந்தியன் பிலிம்ஸ் டிவிஷனிலே எடுத்த " ஹாலிடே இன் சவுத் " என்ற படம் போட்டுக் காண்பித்தார்கள். அது மிகவும் அழகாக இருந்தது. கனம் அமைச்சர் அவர்கள் அதைப் பார்த்தார்களா என்று அறிய விரும்புகின்றேன் ? அதுவுமின்றி நீலகிரியைப் பற்றி விஸ்தாரமாக படமெடுப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன் ?

கனம் திரு. ஜி. பூவராகன் : பல படங்கள் எடுத்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலும் எடுத்திருக்கிறார்கள். இனியும் எடுக்கலாம். அந்தப்படங்கள் எல்லாம் போட்டு காண்பிக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர் விரும்பினால், அவைகள் எல்லாம் போட்டுக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்தப் படங்களின் தலைப்புக்கள் எல்லாம் பெரும்பாலும் அரசாங்கத்தின் சாதனைகளை மக்களுக்கு விளம்பரப்படுத்துகின்ற முறையிலே அமைத்திருக்கின்றதே தவிர, தமிழ்நாட்டினுடைய பெரும் பழமையை மற்ற மாகாணங்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையிலே அமையவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட படங்களையும் எடுப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இந்தத் துறைக்கே விளம்பரத் துறை என்று பெயர். இது நம் சாதனைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்குத் தான் செய்யப்பட்டிருக்கின்ற ஒன்று. இது மற்றவர்களுக்கும் பயன்படும் வகையிலே ஆங்காங்கு, அந்தந்த மாகாணங்களிலும் காண்பிக்கப்படுகின்றது.

24th July 1962]

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தீண்டாமை விலக்கு சம்பந்தமாக இது வரை படம் ஏதாவது பிடிக்கப்பட்டு இருக்கிறதா அல்லது ஏதாவது படம் எடுக்க முயற்சிக்கப்படுமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக படம் பிடிக்கப்பட்டிருக்கின்றது. கனம் அங்கத்தினர் விரும்பினுல் அப்படம் போட்டு காண்பிக்கப்படும்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : ஸார், தேசப் பிரிவினையைக் கோருவதால், தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கான நல்ல படங்களைத் தயாரித்து மக்களுக்குக் காண்பிப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இதைப் பரிசீலனை செய்து, அவசியம் இருக்குமானுல், அதுபோன்ற படமும் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : இந்தச் சபையின் நடவடிக்கைகளைப் படம் எடுத்து மக்களுக்கு காண்பிக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : கனம் அங்கத்தினர் எல்லோரும் கலந்து யோசித்து அப்படி ஒரு படம் எடுக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால், அதைப்பற்றியும் கவனிக்கப்படும்.

திரு. கே. பொன்னையா: வால்பாறைத் தேயிலைத் தோட்டங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் படிப்பு வாசனை அற்றவர்கள். அவர்களுக்கு இந்த குடும்ப நலம், ∴பாமிலி ப்ளானிங் போன்ற படங்களைப் போட்டுக் காண்பித்தால் மிகவும் நலமாக இருக்கும். இதை சர்க்கார் கவனிப்பார்களா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இப்போது எல்லா இடங்களிலும் இது போன்ற படங்கள் போட்டு காண்பிக்கப்பட்டு வருகின்றன. கனம் அங்கத்தினர் விருப்பப்படி அங்கேயும் போட்டுக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஏ. ஆறுமுகம் : ஸார், நம்முடைய நாடு தாழ்ந்து இருக்கின்றது என்று ஒரு கூட்டத்தினர் சொல்வதால், இந்தப் படங்களை யெல்லாம் முக்கியமாக கிராமங்களிலே போட்டுக் காண்பித்தால் நம் நாடு எப்படி உயர்ந்து இருக்கின்றது என்பதைப்பற்றிபுரிந்து கொள்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்வர்களா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : இப்போது நாட்டிலே இப்படிச் சொல்லிக் கொண்டு வருகின்றவர்கள், இந்தப் படத்தை பார்த்து விட்டப் பிறகும்கூட இன்னும் நாடு வளரவில்லை என்றுதான் சொல்வார்கள். அதைவைத்துக் கொண்டு, கிராமங்களிலே காண்பிக்கப்படுமா என்று சொல்வது சரியில்லை. இப்போது இவைகள் எல்லாம் கிராமங்களிலே காண்பிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், கடந்த 19-ம் தேதி இங்கு பாரீஸ் கார்னரிலே, சர்க்கார் பஸ் . . . . . (மணியடிக்கப்பட்டது).

சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் (உதவி தொகை).

608. கேள்வி—**திரு. முனு ஆதி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை சலவைத் தொழில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள் எங்கெங்கு இருக்கின்றன ?

(இ) இவை அரசாங்கத்தாரால் நடத்தப்படுபவனவா அல்லது சலவைத் தொழிலாளர்களாலேயே ஆரம்பித்து நடத்தப்படுபவனவா ?

(உ) இத்தகைய ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் அளிக்கும் உதவித் தொகை எவ்வளவு ?